**செ. கு. எண்:096** **நாள்: 05.07.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 5.7.2017

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. M.சின்னபையன் அவர்கள் 14.6.2017 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடம் காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. P.மாரிமுத்து அவர்கள் 16.6.2017 அன்று நெஞ்சு வலியின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி பாலகாதேவி அவர்கள் 18.6.2017 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. எம். ஜோசப் சாமுவேல் அவர்கள் 22.6.2017 அன்று மாரடைப்பால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகர காட்டூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. சு. தண்டபாணி அவர்கள் 23.6.2017 அன்று மாரடைப்பால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், ஆயுதப்படை, 2-ஆம் படைப் பிரிவில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. A.ஆனந்தபாபு அவர்கள் 25.6.2017 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. அ. பூமிநாதன் அவர்கள் 26.6.2017 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், பங்களாபுதூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. செ. பழனிசாமி அவர்கள் சாலை விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 29.6.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட நிகழ்வுகளில் உயிரிழந்த திரு M.சின்னபையன், சிறப்பு உதவி ஆய்வாளர், திரு மாரிமுத்து, தலைமைக் காவலர், திருமதி பாலகாதேவி, சிறப்பு உதவி ஆய்வாளர், திரு ஜோசப் சாமுவேல், சிறப்பு உதவி ஆய்வாளர், திரு. தண்டபாணி, தலைமைக் காவலர், திரு ஆனந்தபாபு, காவலர், திரு பூமிநாதன், தலைமைக் காவலர் மற்றும் திரு. பழனிசாமி, தலைமைக்காவலர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட எட்டு காவலர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**